# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● நவம்பர் 21, 2017

Weekly E-paper ● November 21, 2017


## ஆயிரம் தலை கேட்கும் அபூர்வ சிந்தாமணிகள்!




● சுப.வீரபாண்டியன்


கலை இலக்கியம் யாவும் கையில் தடி எடுத்தவர்களுக்காகவே என்பதை நோக்கி நகர்கிறது இந்திய அரசியல். இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன், தமிழில் வெளிவந்த மெர்சல் என்னும் படம் காவிகளின் எதிர்ப்புக்கு ஆளானது. இப்போது 'பத்மாவதி' என்னும் பாலிவுட் படம் கடும் எதிர்ப்புக்கும், கொலை மிரட்டல்களுக்கும் ஆளாகியுள்ளது.

அந்தப் படம், முறைப்படி தணிக்கைச் சான்றிதழைப் பெற்றுள்ளது. அந்தப் படத்தில் தடை கோரும் அளவிற்கு ஏதுமில்லை என்று அக்குழு கூறியுள்ளதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டு, தணிக்கைக் குழுவின் முடிவில் தாங்கள் தலையிட முடியாது என்று ஒருமுறைக்கு இருமுறை கூறிவிட்டது. ஆனால் கலவரக்காரர்கள் ஓய்வதாக இல்லை. அங்குள்ள அரசுகளும் தங்கள் மௌனத்தைக் கலைப்பதாக இல்லை.

ரஜபுத்திர அரசியான பத்மாவதி பற்றிய கற்பனை கலந்த கதை அது.அடக்க ஒடுக்கமான ஆண்களுக்கு அடங்கிய பெண் என்னும் கற்பிதம் உடைக்கப்பட்டு, சுதந்திரமாக ஆடிப்பாடும் காட்சிகள் படத்தில் உள்ளன என்பது எதிர்ப்புக்கு ஒரு காரணம் என்கின்றனர். அலாவுதீன் கில்ஜியுடன் கனவுப் பாடல் ஒன்றில் பத்மாவதி நடனமாடுகிறாள் என்பதுதான் கோபத்திற்கான முதல் காரணம் என்கின்றனர். ஆனால் படத்தில் அப்படி ஒருகாட்சியே இல்லை




என்று திட்டவட்டமாக மறுத்துள்ளார், அப்படைப்பின் இயக்குனர் பன்சாலி.

கடந்த ஜனவரி மாதம் படப்பிடிப்பு நடந்த இடத்திற்கே சென்று கலவரம் செய்து, படப்பிடிப்புத் தளத்தையே ஒருகும்பல் அடித்து நொறுக்கியுள்ளது. இப்போது, அப்படத்தின் முன்னோட்டக் காட்சி இடம்பெற்ற ஒரு திரையரங்கம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் தாண்டி, இயக்குனர் பன்சாலி, கதாநாயகி தீபிகா படுகோனே இருவரின் தலைகளையும் கொண்டு வருபவர்களுக்குப் பத்துக் கோடி ரூபாய் சன்மானம் அளிக்கப்படும் என்று, ஹரியானாவின் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளிப்படையாக அறிக்கை வெளியிட்டுள்ளார். இன்றுவரை அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. உ.பி.யின் துணை முதல்வரே, அந்தப் படத்தை வெளியிட அனுமதிக்க மாட்டோம் என்று சட்டத்திற்குப் புறம்பாகப் பேசியுள்ளார்.

ஜனநாயகத்தை விட்டு விலகி, சர்வாதிகாரத்தை நோக்கி இந்தியா செலுத்தப்படுகிறது என்பதையே இந்நிகழ்வுகள் காட்டுகின்றன. ஆயிரம் தலை கேட்கும் இந்த அபூர்வ சிந்தாமணிகளின் கொட்டத்தை அடக்கியே தீர வேண்டிய கட்டாயம் அனைவருக்கும் உள்ளது.

●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**



**17.11.2017** அன்று காலை, மரக்காணம் அருகில் உள்ள விளம்பூர் கிராமத்தில், SDPI கட்சி இளைஞர்களுக்கு, திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சுபவீ "திராவிட இயக்க வரலாறு" குறித்து, விரிவுரை ஆற்றினார். எஸ்டிபிஐ நிறுவனர் தெஹ்லான் பார்கவி அமர்ந்துள்ளார்.



**18.11.2017** காலை, சென்னை, புதுக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற முனைவர் ரஷீத் கான் எழுதியுள்ள "திராவிட இயக்கமும் முரசொலியும்" நூல் வெளியீட்டு விழாவில், நீதியரசர் ஏ.கே. ராஜன். முன்னாள் துணைவேந்தர்கள் சாதிக், ஜெகதீசன், எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், தோழர் ஓவியா, எழுத்தாளர் இமையம் ஆகியோருடன் தோழர் சுபவீ.

## என்ன இல்லை மாறனுக்கு?




***கரிகாலன் பதில்களில் கலைஞர்***

முரசொலி மாறனுக்கு அஞ்சல்தலை வெளியிட்டது குறித்து 'அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?' என்று கேட்டு, ஓர் ஆங்கில ஏடு வாசகர் கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அவர் முப்பது ஆண்டுகளுக்கு மேல் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். மூன்று, நான்கு முறை மத்திய அமைச்சராக இருந்துள்ளார். மிசா கொடுமையைச் சிறையில் அனுபவித்துள்ளார். தோஹா மாநாட்டில் பேசிய உரைக்காகப் பொருளாதார மேதைகளின் பாராட்டுகளைப் பெற்றுள்ளார். திராவிட இயக்க வரலாறு, மாநில சுயாட்சி போன்ற அரிய நூல்களை எழுதியுள்ளார். என்ன தகுதி இல்லை அவருக்கு? மார்பில் பூணூல் இல்லை என்பதைத் தவிர!

மேற்கோள், "திராவிட இயக்கமும், முரசொலியும்" நூலில்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

**கருஞ்சட்டைத் தமிழர்**



## முட்டையிட மறுக்கும் அரசு

**சி**ரமறுத்தல் மன்னருக்குப் பொழுதுபோக்கு, மக்களுக்கோ உயிரின் வாதை என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

இன்றைய அரசு மக்களின் நிலையும் மக்களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது.

ஏழை நடுத்தர மக்களைக் கருத்தில் வைத்து உருவாக்கப்பட்ட 'ரேசன்' கடைகளில் சர்க்கரை, பருப்பு, மண்ணெண்ணெய் போன்றவைகளைப் படிப்படியாக நிறுத்தி, இறுதியில் கடைகளையே மூடிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபோல இப்பொழுது பள்ளிக் குழந்தைகளின் சந்துணவுத் திட்டமும் ஆகிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த அ.தி.மு.க. அரசு.

1989ஆம் ஆண்டு சத்துணவில் முட்டை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து, 15.07.2007 முதல் வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்க கலைஞரின் தி.மு.க. அரசு ஆணை பிறப்பித்தது.

அதற்கும் இப்பொழுது ஆபத்து நேர்ந்துள்ளது.

முட்டை விலை உயர்ந்துள்ளது என்ற காரணத்தைச் சொல்லி, முட்டைகளைக் கொள்முதல் செய்யாமல், குழந்தைகளுக்குச் சத்துணவில் வழங்காமல் நிறுத்தியுள்ளதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார் தி.மு.க. செயல் தலைவர் தளபதி ஸ்டாலின்.

ஏறத்தாழ 69 லட்சம் குழந்தைகளின் உடல் நலம் குறித்தும் அவர்களின் கல்வி குறித்தும் கொஞ்சமும் கவலை இல்லாத இந்த அரசு -

சத்துணவு மையங்களின் பணியாளர்கள் நியமனம், அவர்களின் சம்பள நிர்ணயம், அதற்கான டெண்டரின் முறைகேடுகள், குழந்தைகளுக்குக் கலவை உணவு கொடுப்பது போன்றவற்றில் நிகழ்ந்த பல்வேறு முறைகேடுகளுக்காக நீதிமன்றத்தின் கண்டனங்களுக்கு ஆளாகிய அரசு இந்த அ.தி.மு.க அரசு.

எதைத் தொட்டாலும் லஞ்சம். எங்கு பார்த்தாலும் ஊழல் நடந்துகொண்டிருக்கும் ஆட்சி.

செய்ய வேண்டிய மக்கள் நலத் திட்டங்களை விட்டுவிட்டு, தேவையில்லாத நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்காகக் கோடி கோடியாக அரசு பணத்தை வீணடிக்கும் ஆட்சியாளர்கள்.

இவர்களின் ஆடம்பரத்திற்கும் கொள்ளைகளுக்கும் குழந்தைகளின் உடல்நலம் பேணும் சத்துணவு முட்டைகள்தானா கிடைத்தன?

எத்தியோப்பியாவில் வாழும் குழந்தைகளைப் போலத் தமிழகக் குழந்தைகளை ஆக்காமல் இருக்கவேண்டும் இந்த அரசு.

# ஆளுநர் ஆய்வு அத்துமீறும் செயல்!

● சுபவீ



செய்ய வேண்டிய வேலையைச் செய்யாமல் போனார் முந்தைய ஆளுநர் (பொறுப்பு). செய்ய வேண்டாத வேலைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார் தமிழகத்தின் இன்றைய ஆளுநர். இவர்களை முன்னுணர்ந்தே வள்ளுவர்,

**"செயத்தக்க அல்ல செயக்கெடும் செயத்தக்க செய்யாமை யானும் கெடும்"**

என்று கூறியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதிகாரிகளை அழைத்து ஆளுநர் பேசுவது, அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள ஊர் இவைகளையெல்லாம் பார்க்கும்போது, இது திட்டமிட்ட நிகழ்வாகவே தோன்றுகிறது. குடியரசுத் தலைவர் ஆட்சிக்கான முன்னோட்டமோ என்றும் ஐயம் வருகின்றது.

ஆளுநர் பதவி என்பதே ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்றுள்ள ஆதிக்கத்தின் மிச்சம். ஆனால், 1935 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த சட்டத்தில் இருந்ததை விட, 1950 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டம் அவருக்குக் கூடுதலான அதிகாரத்தை வழங்கியுள்ளது.

ஆளுநருக்கு, நிர்வாகம், நிதி, நீதி, சட்டமன்றம் ஆகிய நான்கு துறைகளில் வழங்கியுள்ள அதிகாரம் போதாது என்று, 163 ஆவது பிரிவு விருப்ப அதிகாரம் (discretion power) என்ற ஒன்றையும் கூடுதலாக வழங்கியுள்ளது. இந்த அதிகாரம், குடியரசுத் தலைவருக்கான 74 ஆம் பிரிவில் கூட இல்லை.

குடியரசுத் தலைவர் பதவி அலங்காரப் பதவி என்றால், ஆளுநர் பதவி மட்டும் எப்படி அதிகாரப் பதவி ஆக முடியும்? இன்று தமிழ்நாட்டில் ஆளுநர் தெருவில் இறங்கி மக்களைச் சந்திப்பதும், அதிகாரிகளை அழைத்துக் கூட்டம் போடுவதும் சரி என்றால், குடியரசுத் தலைவரும் இப்படிச் செயல்படுவதை மத்திய அரசு ஏற்குமா? அங்கொரு நீதி, இங்கொரு நீதியா?

மாநில சுயாட்சி உளுத்துப் போன ஒன்றாக ஆகிவிட்டது என்று பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒருவர் சொல்கிறார். அப்படி ஆக வேண்டும் என்பது அவர் விருப்பம். மாநிலங்கள் வலுப்பெறுவதுதான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், ஜனநாயகத்திற்கும் நல்லது. மத்தியில் அதிகாரம் குவிந்தால், அது சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்கும்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கும் ஆட்சி, மக்கள் செல்வாக்கற்ற, மக்களுக்குப் பணி செய்ய விரும்பாத ஆட்சியாக இருக்கின்ற போதும், மக்கள் ஆட்சிக்கு மாறாக, ஆளுநர் ஆட்சி நடத்த முயல்வது எப்படிச் சரியாகும்?

ஆளுநர் எல்லா மாவட்டங்களுக்கும் தொடர்ந்து பயணம் செய்ய இருக்கின்றார் என்ற அறிவிப்பும், அதனை "டேக் இட் ஈஸி" என்று சொல்லும் சுரணையற்ற அமைச்சர்களும் அறிஞர் அண்ணா முன்மொழிந்த மாநில சுயாட்சிக்கு நேர்ந்துள்ள அவமானம்!

ஆதிக்கம் செலுத்த மத்திய அரசும், அவமானப்பட மாநில அரசும் அணியமாக இருக்கலாம். ஆனால் தன்மானமுள்ள தமிழகம் அதற்கு அடிபணியாது! ●

Tamil Nadu Public Service Commission

# விருப்பத்திற்குச் சூறையாட வேட்டைக்காடா தமிழ்நாடு?

● சுபவீ

**எ**ல்லாக் கதவுகளும் திறக்கப்பட்டு விட்டன. இனி யார் வேண்டுமானாலும் உள்ளே வந்து தமிழ்நாட்டைத் தனதாக்கிக் கொள்ளலாம் என்னும் நிலை இங்கு உருவாகிக் கொண்டுள்ளது.

அண்மையில் தமிழ்நாடு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களுள் ஐம்பது விழுக்காட்டிற்கும் கூடுதலாகப் பிற மாநிலத்தவர் தேர்வாகியுள்ளனர். என்ன நியாயம் இது?

இதனையும் தாண்டி அடுத்த கொடிய அறிவிப்பு இப்போது வெளிவந்துள்ளது. தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வாணையம் (TNPSC), தமிழக அரசின் நான்காம் நிலை (குரூப் 4) தேர்வுகளை எழுதுவோருக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பணியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டால் போதும் என்று கூறியுள்ளது.

இதே நிலை அடுத்தடுத்து மற்ற பிரிவுகளுக்கும் (Group I, II, III) விரைவில் வரக்கூடும். அப்போது நம் நிலை என்ன ஆகும்? கிராமத்தில் உள்ள மக்களின் நிலை என்ன ஆகும்? மாவட்ட ஆட்சியர் தொடங்கி, கடைநிலை ஊழியர் வரையில் எவருக்கும் தமிழ் தெரியாதெனில், அவர்களுடன் மக்கள் எந்த மொழியில் பேசுவார்கள்?

நம் நாட்டுக்கு வேலைக்கு வருகின்றவர்கள் முதல் இரண்டு ஆண்டுகள் தமிழைக் கற்றுக் கொள்ளவில்லை என்றால், மக்கள் அவர்கள் மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டுமா?

எங்கே போகிறது தமிழகம்?




சுபவீயின் நூல்கள்
கருஞ்சட்டை அலுவலகத்தில்
விற்பனைக்குக் கிடைக்கும்
விற்பனை நேரம் :
காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை





# திராவிடத்தின் பைந்தமிழே!

● கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்

தென்னவர் பண்பை, வீரம்
        தேக்கிய போர்வாள்! நாட்டை
மன்னவர் ஆண்ட பாட்டை
        மறத்தமிழ் வெற்றிப் பாட்டை
கன்னலாய்த் தமிழை அள்ளி
        கவிதையாய் வடித்த பாட்டை
பொன்வரி பெரியார் பாட்டை
        புகழ்பட விரித்தார் நன்னன்!

கோபுரம் சாய்ந்த தம்மா!
        கொடிதமிழ் அறுந்த தம்மா!
யாவரும் போற்றும் பண்பில்
        இடியொன்று விழுந்த தம்மா!
மேவிடும் கருவூ லத்தை
        மின்னலும் கிழித்த தம்மா!
தேனடை எரிந்த தென்றால்
        தேற்றுவார் உண்டோ ? உண்டோ ?

வீறுடைத் தமிழு ணர்வில்
        விசைகொண்ட நடையும் எங்கே ?
காருடைக் கருத்தைச் சுமந்த
        கனிமொழி நாவும் எங்கே ?
பேருடைப் புகழ்சேர் தங்கம்
        பீரிட்ட ஒளியும் எங்கே ?
வேருடைத் தமிழின் தேக்கு
        விசையென சாய்ந்த தம்மா!

பெரியாரை உணர்ந்தவரே! திராவி டத்தில்
        பெருங்கடலாய்க் கொள்கைஅலை முழக்கம் செய்தீர்!
நரியாரின் சூழ்ச்சிகளை அறுத்தெ றிந்தே
        நாடெங்கும் மேடையிலே முழக்கம் செய்தீர்!
அரிதாரம் பூசிவந்த அவாள்கள் கொண்ட
        ஆணவத்தை அன்றன்று வெட்டிச் சாய்த்தீர்!
பரியாக வலம்வந்தீர்! திராவி டத்தின்
        பைந்தமிழே! நன்னனாரே! மீண்டும் வாரீர்!

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.